2022–ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 11–ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்ற நகர மன்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கைகள்.

முன்னிலை:– திரு.பி.ஏஜாஸ் அஹமத் அவர்கள்
நகர மன்றத்தலைவர்,
ஆம்பூர் நகர மன்றம்

1. திரு.பி.ஏஜாஸ் அஹமத், நகர மன்றத்தலைவர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

நடைபெற்ற நகர்புற உள்ளாட்சித்தேர்தலில், ஆம்பூர் நகர மன்றத்தலைவராக திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக என்னை தேர்வு செய்து வெற்றி பெற செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கும், மாண்புமிகு நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அண்ணன் நேரு அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் அண்ணன் ஏ.வ.வேலு அவர்களுக்கும், வேலூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் அண்ணன் டி.எம்.கதிர் ஆனந்த் அவர்களுக்கும், ஆம்பூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் அண்ணன் அ.செ.வில்வநாதன் அவர்களுக்கும் எனது சார்பாகவும், ஆம்பூர் நகர மன்றத்தின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவிக்க தீர்மானிக்க.
தீர்மான எண்.01 :– ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

2, திரு.எம்.ஆர்.ஆறுமுகம், நகர மன்ற துணைத்தலைவர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

தமிழ்நாடு முதலைமச்சராக மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்று தமிழகத்தில் மிகவும் கொடிய நோயால் (கொரோனா) பாதிக்கப்பட்ட தமிழகத்தை சுற்று சுழன்று இந்தியாவிலேயே கொரோனா நோய் தொற்று இல்லாத சிறந்த தமிழகத்தை உருவாக்கியும், 6–ஆண்டுகள் உள்ளாட்சி மற்றும் நகராட்சி தேர்தல்கள் நடைபெறாத தமிழகத்தில் சிறப்பான முறையில் உள்ளாட்சி மற்றும் நகராட்சி தேர்தலை நடத்தி கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும் ஆம்பூர் நகர சபையின் சார்பில் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையயும் இம்மன்றத்தில் தெரிவிக்க தீர்மானிக்க.
தீர்மான எண்.02 :– ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**3.** தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 3 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>சொத்துவரி:</u>

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(**Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| கூதாழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்குலூ | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்குலூ | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு
செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டடுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் ஆம்பூர் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி(**Current Liabilities**) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 2.03 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 1.48 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | 86.74 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 0.21 |
| | மொத்தம் | 90.46 |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், ஆம்பூர் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

/5/

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

**அலுவலகக் குறிப்பு: 1.**அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022–**ன்படி மன்றம் பதிவு செய்யலாம்**.

**2.மேற்படி அரசாணையின் வழிகாட்டுதலின் படி சொத்துவரி பொது சீராய்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்**

ந.க.எண்.786/2022/அ1

தீர்மான எண்.03 :– பதிவு செய்யப்பட்டது.

4. ஆம்பூர் நகராட்சியானது தேர்வு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியில் 2011 மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி 114608 ஆகும். தற்போதைய மக்கட் தொகை சுமார் 145000 ஆகும். இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 17.97 சதுர கி.மீ.ஆகும்.மேலும் இந்நகராட்சி 36 வார்டுகளை கொண்டுள்ளதாகும்.

இந்நகராட்சியில் தற்போது நகரமன்ற தலைவர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு TN83Y9506 ஈப்பு வாகனமும் (Mahindra–Bolero). ஆணையாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு TN23BX3308 ஈப்பு வாகனமும் (Mahindra–Bolero) உள்ளது. ஆணையாளர் அவர்களின் பயன்பாட்டில் உள்ள வாகனம் 2010–ஆம் ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டு தற்போது வரையில் பயன்பாட்டில் உள்ளது. மேற்குறிப்பிட்ட ஆணையாளர் பயன்படுத்தும் வாகனமானது அடிக்கடி பழுது ஏற்பட்டு செலவினம் ஏற்படுவதால் அதனை கழிவு செய்து ஆணையாளர் பயன்பாட்டிற்கு புதியதாக ஈப்பு வாகனம்(SCORPIO) வாங்கவும், மேலும் இந்நகராட்சி பொறியாளர் பயன்பாட்டிற்கு எந்தவித வாகனமும் இல்லாத காரணத்தால் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை ஆய்வு செய்யவும், குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளவும் சிரமமான சூழ்நிலை உள்ள காரணத்தால் நகராட்சி பொறியாளருக்கு அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக ஈப்பு வாகனம் (Mahindra–Bolero) கீழ் குறிப்பிட்டுள்ள விவரப்படி வாங்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் உரிய அனுமதி பெற மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண். | வாகன விவரம் | பயன்படுத்தும் அலுவலர் | உத்தேச செலவின தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | MAHINDRA SCORPIO | COMMISSIONER | 12.00 |
| 2 | MAHINDRA BOLERA | MUNICIPAL ENGINEER | 8.50 |

அலுவலக குறிப்பு:–அ. அனுமதி வழங்கலாம்.

ஆ. மேற்குறிப்பிட்டுள்ள ஈப்பு வாகனங்களை அரசு நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் அரசு நிதியிலோ அல்லது நகராட்சி வருவாய் நிதியிலோ வாங்க அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.685/இ1/2022

தீர்மான எண்.04 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5, இந்நகராட்சியில் 2021-2022-ஆம் ஆண்டு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ், கஸ்பா.அ.சோமலாபுரம் சாலையில் நவீன தகன எரிவாயு மேடை கட்டிடம் கட்டுதல் பணியினை ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 30.11.2021-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, 14.12.2021-ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது. மேற்குறிப்பிட்டுள்ள இடத்தில் நவீன தகன எரிவாயு மேடை கட்டிடம் கட்டுதல் பணி ஆரம்பிக்கப்பட்டபோது அப்பகுதி மக்கள் ஆட்சேபணை தெரிவித்ததால், அவ்விடத்திற்கு பதிலாக கஸ்பா.அ. பகுதி சுடுகாட்டிற்கு அருகாமையில் பாதாள சாக்கடை திட்டத்திற்காக அமைக்கப்பட்டு வரும் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அருகில் 25மீX25மீ அளவில் நவீன தகன எரிவாயு மேடை கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி சுத்திகரிப்பு நிலையம் அமைய உள்ள இடத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் நவீன தகன எரிவாயு மேடை கட்டிடம் அமைக்க இட ஒதுக்கீடு செய்துதர தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை கோரவும் மற்றும் மேற்படி இடத்தில் நவீன தகன எரிவாயு மேடை அமைக்க தடையில்லா சான்று வழங்க தமிழ்நாடு மாசு கட்டாட்டு வாரியத்தை கோரவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1273/இ1/2021

தீர்மான எண்.05 :-அனுமதிக்கப்பட்டது.

ஓம்/-பி.ஏஜாஸ் அஹமத்
தலைவர்
நகர மன்றம், ஆம்பூர்

/உண்மை நகல்/

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி